**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of Judicial Magistrate, Gingee.**

**CC.No. 161/2023**

| | |
|---|---|
| Deposition of Witness for PW | : 6 |
| Name (திரு/திருமதி) | : சுந்தர்ராஜன் |
| Father's Name/ Husband's Name | : பஞ்சவர்னம் |
| Village & Taluk | : வேலூர் |
| Calling | : மோட்டார் வாகன ஆய்வாளர் |
| Age | : 52 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 26.11.2025**

(எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச. பிரிவு 317/ 355 BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

**முதல் விசாரணை :**

நான் தற்போது வேலூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் வட்டார போக்குவரத்து அலுவலராக பணி செய்கிறேன். கடந்த 09.06.2022 அன்று செஞ்சி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் மோட்டார் வாகன ஆய்வாளராக பணி செய்த போது அனந்தபுரம் காவல் ஆய்வாளர் கொடுத்த வேண்டுகோள் கடிதத்தின் படி குற்ற எண் 147/2022 பிரிவுகள் 279, 304 A இதச வழக்கில் சம்மந்தப்பட்ட TN 21 N 1878 என்ற அரசு பேருந்தை என் அலுவலகத்தில் வைத்து விபத்தாய்வு செய்தேன். ஆய்வில் வாகன பதிவேடுகள் சரியாக இருந்தன. வாகனத்தில் பின்வரும் சேதங்கள் காணப்பட்டன. 1. முன்பக்க பம்பர் நடுப்பகுதி உடைந்து காணப்பட்டது. 2. முன்பக்க கிரில் சேதமடைந்து காணப்பட்டது. 3. ரேடியேட்டர் உட்புறமாக நசுங்கி காணப்பட்டது. வாகனத்தின் கால்தடை திறன் 67% இருந்தது. ஸ்டீரியங் நல்ல நிலையில் காணப்பட்டது. டயர்கள் திருப்திகரமாக இருந்தது. இந்த விபத்து எந்தவொரு இயந்திர கோளாறின் காரணமாகவும் ஏற்படவில்லை என்று கருத்து கூறி நான் மோட்டார் வாகன ஆய்வறிக்கை வழங்கினேன். மேற்படி மோட்டார் வாகன ஆய்வறிக்கை **அசா. ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. அன்றை தினமே இதே வழக்கில் சம்மந்தப்பட்ட TN 32 D 4353 என்ற இரு சக்கர வாகனத்தை என் அலுவலகத்தில் வைத்து விபத்தாய்வு செய்தேன். வாகனத்தின் ஓட்டுநர் உரிமம், பதிவு சான்று மற்றும் காப்பீடு சான்று ஆகியவைகள் சமர்பிக்கப்படவில்லை. வாகனத்தில் பின்வரும் சேதங்கள்

காணப்பட்டன. 1. முகப்பு விளக்கு சேதமடைந்து காணப்பட்டது. 2. ஹாண்டில் பார் உடைந்து காணப்பட்டது. 3. Fork வளைந்து காணப்பட்டது. முன் பக்க மர்காடு உடைந்து காணப்பட்டது. 4. Fuel Tank ஒடுங்கி காணப்பட்டது. 5. Gear Shifting lever வளைந்து காணப்பட்டது. 6. முன் பக்க பம்பர் சேதமடைந்து காணப்பட்டது. வாகனத்தில் ஏற்பட்ட சேதங்களின் காரணமாக வாகனத்தை இயக்கி பார்க்க இயலவில்லை. ஸ்டீரியங் நல்ல நிலையில் காணப்பட்டது. டயர்கள் திருப்திகரமாக இருந்தது. இந்த விபத்து எந்தவொரு இயந்திர கோளாறின் காரணமாகவும் ஏற்படவில்லை என்று கருத்து கூறி நான் மோட்டார் வாகன ஆய்வறிக்கை வழங்கினேன். மேற்படி மோட்டார் வாகன ஆய்வறிக்கை **அசா. ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1. இவ்வழக்கில் தொடர்புடைய இரு வாகனங்களையும் நான் என் அலுவலகத்தில் வைத்து விபத்தாய்வு செய்தேன் என்றால் சரிதான். மேற்படி வாகனங்கள் நான் சம்பவ இடத்தில் வைத்து ஆய்வு மேற்கொள்ளாத காரணத்தினால் எந்த வாகனத்தின் செயலகளால் இந்த விபத்து ஏற்பட்டது என்பதை என்னால் குறிப்பிட இயலாது என்றால் சரிதான். இரு சக்கர வாகனத்திற்கு ஏற்பட்ட அனைத்து சேதங்களும் அதன் முன் பக்கத்தில் தான் காணப்பட்டது என்றால் சரிதான். இரு சக்கர வாகனத்தின் பின் பக்கத்தில் எந்த சேதாரமும் காணப்படவில்லை என்றால் சரிதான்.

2. அரசு பேருந்தும், இரு சக்கர வாகனமும் நேருக்கு நேர் மோதிக்கொண்டால் மட்டும் தான் இரு சக்கர வாகனத்தின் முன் பக்கத்தில் சேதம் ஏற்படும் என்றால் சரிதான். அரசு பேருந்து அதற்கு முன்னால் சென்ற இரு சக்கர வாகனத்தின் மீது மோதியதாக புகாரில் குறிப்பிடப்பட்டுள்ளது அவ்வாறு எனில் இரு சக்கர வாகனத்தின் பின் பக்கத்தில் தான் சேதங்கள் காணப்பட்டிருக்க வேண்டும் என்றால் சரிதான்.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறு விசாரணை :** இல்லை.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

Sd/–B.Vidhya,

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

செஞ்சி.